பள்ளிப் பாடப்புத்தகங்கள் எடைக்கு விற்பனை தலைமையாசிரியை பணியிடை நீக்கம்

திருச்சி, நவ. 9: திருச்சியில் பள்ளி மாணவர்களின் பாடப் புத்தகங்களை எடைபோட்டு விற்பனை செய்த தலைமையாசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்துக்குள்பட்ட தும்பலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்துவருகின்றனர். தற்போது, மாணவர்களுக்கு இரண்டாம் பருவம் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில், பள்ளி தலைமையாசிரியர் எஸ். மஞ்சுளா, முதல் பருவத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களை அவர்களிடமிருந்து மீண்டும் பெற்று, பள்ளி வளாகத்திலேயே வியாபாரியை வரவழைத்து எடைபோட்டு கடந்த வெள்ளிக்கிழமை விற்பனை செய்துள்ளார். இதுதொடர்பான விடியோ சமூகவலைதளங்களில் பரவியது.

இதுகுறித்து தகவலறிந்து மாவட்ட கல்வி அலுவலர் (முசிறி) மதியழகன், பள்ளி வளாகத்தில் கடந்த சனிக்கிழமை ஆய்வு செய்து தலைமையாசிரியர் மற்றும் மாணவர்களிடம் விசாரணை செய்தார். இதில், தலைமையாசிரியை மாணவர்களிடம் இருந்து புத்தகங்களைப் பெற்று விற்பனை செய்தது உறுதியானது.

இதையடுத்து, தலைமையாசிரியர் மஞ்சுளாவை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட கல்வி அலுவலர் மதியழகன் கடந்த சனிக்கிழமை உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பான அறிக்கையையும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கும், பள்ளிக் கல்வித் துறை இயக்குநரகத்துக்கும் அனுப்பியுள்ளதாக மாவட்டக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

சிறுகனூர், புத்தாநத்தம் பகுதிகளில் நாளை மின் நிறுத்தம்

மண்ணச்சநல்லூர்/மணப்பாறை, நவ. 9: சிறுகனூர் துணைமின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறும் சிறுகனூர், ஆவாரவள்ளி, திருப்பட்டூர், எம்.ஆர்.பாளையம், சி.ஆர்.பாளையம், சனமங்கலம், மணியங்குறிச்சி, வாழையூர், சீதேவி மங்கலம், நெடுங்கூர், நெய் குளம், நம்புகுறிச்சி, ஊட்டத்தூர், எம்.ஏ.எம் கல்லூரி, ரெட்டிமாங்குடி, பி.கே.அகரம், ரானே கம்பெனி, கொளக்குடி, புஞ்சை சங்கேந்தி, கண்ணாக்குடி, குமுளூர்மற்றும் தச்சன் குறிச்சி பகுதிகளில் நவ.11-ஆம் தேதி புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மின்வாரிய செயற்பொறியாளர் ஆர். செல்வம் தெரிவித்துள்ளார்.


மணப்பாறை: மணப்பாறையை அடுத்த புத்தாநத்தம் துணை மின் நிலையத்தில் நவம்பர் 11-ஆம் தேதி புதன்கிழமை, மாதந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதால் இந்த மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறும் பகுதிகளான புத்தாநத்தம், இடையபட்டி, காவல்காரன்பட்டி, புங்குருனிபட்டி, கணவாய்பட்டி, கழனிவாசல்பட்டி, சமத்துவபுரம், பிள்ளையார்கோவில்பட்டி, பிச்சம்பட்டி, சுக்காம்பட்டி, முத்தாழ்வார்பட்டி, சீல்நாயக்கன்பட்டி, டி.அழங்கம்பட்டி, கோட்டைபளுவஞ்சி, மெய்யம்பட்டி, கருஞ்சோலைபட்டி, வெள்ளையகவுண்டன்பட்டி, மானாங்குன்றம், அழககவுண்டம்பட்டி, டி.தம்மநாயக்கன்பட்டி, டி.கருப்பூர், கருமலை, மணியங்குறிச்சி, கள்ளக்காம்பட்டி, டி.புதுப்பட்டி, எண்டபுளி மற்றும் மாங்கனாப்பட்டி ஆகிய பகுதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மணப்பாறை மின் வாரிய செயற்பொறியாளர் ஏ.செந்தில்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாணவேடிக்கை



திருச்சி மாநகரில் ஞாயிற்றுக்கிழமை இரவு வானில் வண்ண வண்ண நிறங்களில் பூத்த தீபாவளி வாணவேடிக்கை.

துவரங்குறிச்சியில் இன்று மின் நிறுத்தம்



மணப்பாறை, நவ. 9: மணப்பாறையை அடுத்த துவரங்குறிச்சி துணைமின் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (நவ.10) பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், இந்த மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்படும் பகுதிகளான துவரங்குறிச்சி, அழகாபுரி, அக்கியம்பட்டி, நாட்டார்பட்டி, அதிகாரம், சடவேலாம்பட்டி, உசிலம்பட்டி, ஆலம்பட்டி, இக்கரைகோசிக்குறிச்சி, செவந்தாம்பட்டி, தெத்தூர், செவல்பட்டி, பிடாரப்பட்டி, வெங்கட்நாயக்கன்பட்டி, அடைக்கம்பட்டி, நல்லூர், பில்லுப்பட்டி, கல்லுப்பட்டி, அயன் பொருவாய், வேளக்குறிச்சி, மருங்காபுரி, காரைப்பட்டி, கரடிப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, கள்ளக்காம்பட்டி, சிங்கிலிப்பட்டி, எம். இடையப்பட்டி மற்றும் பழையபாளயம் ஆகிய பகுதிகளில் காலை 9 முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மணப்பாறை மின் வாரிய செயற்பொறியாளர் ஏ.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

சமயபுரம் அருகே 2 சிறார்கள் உள்பட 3 பேர் கொலை

மண்ணச்சநல்லூர், நவ. 9: திருச்சி மாவட்டம், சமயபுரம் அருகே ஞாயிற்றுக்கிழமை 2 சிறார்கள் உள்பட 3 பேர் கொலை செய்யப்பட்டனர்.

இனாம் சமயபுரம் பகுதியைச் சேர்ந்தவர் செ.ராகுல் (17). இவரது உறவினரும் அதே பகுதியைச் சேர்ந்தவருமான ரா.விஷால் (17). இவர்கள் இருவரும் கூலித் தொழிலாளர்களாக பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை இரவு சமயபுரம் சுங்கச்சாவடி அருகே உள்ள புள்ளம்பாடி வாய்க்கால் கரையோரமாக அமர்ந்திருந்தனர். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர், ராகுல், விஷால் ஆகிய இருவரையும் பயங்கர ஆயுதங்களால் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

இதில், விஷாலின் முகம் சிதைக்கப்பட்ட நிலையிலும், ராகுல் கழுத்து மற்றும் தலையில் பலத்த வெட்டுக் காயங்களுடனும் ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற சமயபுரம் போலீஸார், உயிரிழந்த இருவரின் உடல்களையும் மீட்டு உடற்கூறாய்வுக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், சம்பவம் நடந்த இடத்தை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டோங்ரே பிரவீன் உமேஷ் ஆய்வுசெய்தார். இதையடுத்து 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தேடும் பணி நடைபெற்று வருகிறது. இந்த சம்பவம் குறித்து சமயபுரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.



சமயபுரம் சுங்கச்சாவடி அருகே திங்கள்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டோர். (உள்படம்) கொலை செய்யப்பட்ட செ. ராகுல், ரா. விஷால்.

சாலை மறியல்: இதனிடையே இரட்டைக் கொலை தொடர்பாக குற்றவாளிகளை கைது செய்யக்கோரி சமயபுரம் சுங்கச்சாவடி பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் திங்கள்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார், மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து மறியல் கைவிடப்பட்டது. தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவி வருவதால் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.டி. ஊழியர் கொலை: சமயபுரம் அருகே உள்ள புறத்தாக்குடி தெற்கு தெருவைச் சேர்ந்தவர் சே.கிறிஸ்டோபர் (21). இவர் சென்னையில் உள்ள தனியார் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார்.

அதே பகுதியைச் சேர்ந்த ப.ரஞ்சித் (26), இருங்களூரில் உள்ள தனியார் கல்லூரியில் பயின்று வரும் ரெ.லெனின் (21). இவர்கள் புறத்தாக்குடி நடுத்தெருவில் ஞாயிற்றுக்கிழமை பட்டாசு வெடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த அதே பகுதியைச் சேர்ந்த டொனால்ட், எடிசன், சார்லஸ் ஆகிய மூவரும் பட்டாசு வெடிப்பதை பார்த்து சப்தம் போட்டதாக கூறப்படுகிறது.



ஐடி ஊழியர் கிறிஸ்டோபர்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. தகராறு முற்றியதில் டொனால்ட், திருவுகோலால் (திருப்புலி) கிறிஸ்டோபரின் மார்பு பகுதியிலும், ரஞ்சித்தின் முகத்திலும் தாக்கியுள்ளார்.

இதையடுத்து, பலத்த காயமடைந்த கிறிஸ்டோபரை அக்கம்பக்கத்தினர் சமயபுரம் தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டுச் சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் கிறிஸ்டோபர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது குறித்து சமயபுரம் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மூதாட்டி சடலம் மீட்பு

திருச்சி, நவ. 9: திருச்சி பொன்மலைபட்டியில் மீட்கப்பட்ட அடையாளம் தெரியாத மூதாட்டியின் சடலம் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி பொன்மலை ரயில்வே காலனியிலுள்ள முட்புதரில் 75 வயது மூதாட்டி இறந்துகிடப்பதாக போலீஸாருக்கு சனிக்கிழமை மாலை தகவல் கிடைத்தது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற போலீஸார் மூதாட்டியின் சடலத்தை மீட்டு உடற்கூறாய்வுக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டியின் காது மற்றும் மூக்கில் இருந்து ரத்தம் கசிந்து இருந்ததாகவும், கழுத்தை நெறித்தது போன்ற தடயம் இருந்ததாகவும் போலீஸார் தெரிவித்துள்ளனர். மூதாட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் போலீஸார் சந்தேகிக்கின்றனர். உடற்கூறாய்வு அறிக்கை வந்த பிறகுதான் கொலையா என்பது தெரிய வரும் என போலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பொன்மலை போலீஸார் சந்தேக மரணம் என்று வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாநகரில் குவிந்த 670 டன் குப்பைகள் அகற்றம்

திருச்சி, நவ. 9: தீபாவளி பண்டிகையையொட்டி திருச்சி மாநகரில் குவிந்த 670 டன் குப்பைகளை தூய்மைப் பணியாளர்கள் திங்கள்கிழமை அகற்றினர்.

திருச்சி மாநகராட்சியில் 5 மண்டலங்களில் 65 வார்டுகள் உள்ளன. இதில், 2 லட்சத்துக்கும் அதிமான வீடுகள் உள்ளன. திருச்சி மாநகரில் தினமும் சராசரியாக 450 டன் குப்பைகள் அகற்றப்படும்.

இந்நிலையில், திருச்சி மாநகரில் தீபாவளி பண்டிகையை பொதுமக்கள் பட்டாசு வெடித்து கோலாகலமாக கொண்டாடினர். இதனால், மாநகரில் வழக்கத்தைவிட 220 டன் குப்பைகள் அதிகரித்து ஞாயிற்றுக்கிழமை ஒரே நாள் மாநகரில் 670 டன் குப்பைகள் கிடந்தன. இந்தக் குப்பைகளை மாநகராட்சியைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் திங்கள்கிழமை அதிகாலை முதல் அகற்றத் தொடங்கினர்.



திருச்சி சிங்காரத் தோப்பு பகுதியில் திங்கள்கிழமை குப்பைகளை அகற்றிய தூய்மைப் பணியாளர்கள்.

மாநகரில் அனைத்து வார்டுகளிலும் பட்டாசு கழிவுகள் அதிமாக இருந்தாலும், மலைக் கோட்டை, என்எஸ்சிபி சாலை, மெயின்காடு கேட், சிங்காரத் தோப்பு, தில்லை நகர், சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் அட்டை பெட்டிகள், நெகிழிக் கழிவுகள், பூ கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான கழிவுகள் சேகரமாகின.

மெயின்காடு கேட், என்எஸ்சிபி சாலையில் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுடன் இணைந்து இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினரும் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

சாலை விபத்தில் அடையாளம் தெரியாத நபர் உயிரிழப்பு

திருச்சி, நவ. 9: திருச்சி அருகே தனியார் பேருந்து மோதியதில் அடையாளம் தெரியாதவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

திருச்சி - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கே.கள்ளிக்குடி அருகே அடையாளம் தெரியாத 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் சாலையை கடக்க முயன்றுள்ளார். அப்போது, தவறான திசையில் இருந்து வேகமாக வந்த தனியார் பேருந்து அவர் மீது மோதியது. இதில், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். இதுகுறித்து தகவலறிந்த தாயனூர் கிராம நிர்வாக அலுவலர் பாரதிதாசன் சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டு காவல் துறைக்கு தகவல் அளித்தார்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த ராம்ஜி நகர் போலீஸார், சடலத்தை மீட்டு உடற்கூறாய்வுக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து தாயனூர் கிராம நிர்வாக அலுவலர் பாரதிதாசன் அளித்த புகாரின்பேரில், போலீஸார் தனியார் பேருந்து ஓட்டுநரான விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த எம். பாண்டி (41) என்பவர் மீது வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி அரசு மருத்துவமனையில் தீக் காயத்துக்கு 22 பேர் சிகிச்சை

திருச்சி, நவ. 9: திருச்சி அரசு மருத்துவமனையில் தீபாவளியையொட்டி தீக்காயத்துக்கு கடந்த 2 நாள்களில் 22 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தமிழகம் முழுவதும் தீபாவளி பண்டிகை ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. தீபாவளி பண்டிகையையொட்டி பட்டாசு விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக திருச்சி அரசு மருத்துவமனையில் 24 படுக்கைகளுடன் சிறப்பு தீவிர சிகிச்சைப் பிரிவு கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், திருச்சியில் சனிக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை காலை வரை பட்டாசு வெடிக்கும்போது ஏற்பட்ட தீக் காயத்துக்காக திருச்சி அரசு மருத்துவமனை சிறப்பு சிகிச்சை பிரிவில் 16 ஆண்கள், 6 சிறுவர், சிறுமியர்கள் என மொத்தம் 22 பேர் சிகிச்சைபெற்றுள்ளனர். அனைவருக்கும் லேசான தீக் காயம் மட்டுமே ஏற்பட்டிருந்ததாகவும், யாருக்கும் பெரிய அளவில் பாதிப்பு இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

9 இடங்களில் தீ விபத்து: திருச்சி பொன்மலை கணேசபுரம் 7-ஆவது தெருவைச் சேர்ந்தவர் மோகன் (32), எலக்ட்ரீசியன்.

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு திருமணமான நிலையில் தலை தீபாவளியைக் கொண்டாட மனைவியுடன் தஞ்சாவூரில் உள்ள மாமியார் வீட்டுக்குச் சென்றுள்ளார். ஞாயிற்றுக்கிழமை பட்டாசு வெடித்ததில் மோகனின் கூறை வீட்டில் தீப் பற்றியது. தகவலறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புத் துறையினர் கூறை வீட்டில் பற்றிய தீயை அணைத்தனர். ஆனால், வீட்டில் இருந்த பீரோ, மிக்ஸி, கிரைண்டர் உள்ளிட்ட பல்வேறு பொருள்களும் எரிந்து சேதமடைந்தன.

இதுகுறித்து பொன்மலை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதேபோல, கே.கே.நகர், திருவானைக்காவல், கொட்டப்பட்டு, வயலூர், எடமலைபட்டிப்புதூர், சிந்தாமணி உள்ளிட்ட 9 இடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை பட்டாசு வெடித்ததில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தீயணைப்பத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

உழவருடன் இணைந்து நெல் நடவு செய்தனர் வேளாண் கல்லூரி மாணவிகள்

மணப்பாறை, நவ. 9: மணப்பாறையை அடுத்த சத்திரப்பட்டியில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் திங்கள்கிழமை வேளாண் கல்லூரி மாணவிகள் உழவருடன் இணைந்து நெல் நடவு செய்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு பயிலும் மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, திங்கள்கிழமை விவசாயியின் வயல்வெளிக்குச் சென்று நெல் நடவுப் பணியில் ஈடுபட்டனர்.

இப்பணியில் கு.ஜனனி, சோ.ஜீவிதா, த.செ.ஜோனா, கி.ஜோதிலட்சுமி, பா.ஜோதீஸ்வரி, கி.கலைச்செல்வி, இர.கா. காருண்ய ஸ்ரீ வர்சினி, மா.பா.கவிதர்ஷினி, மு.கவிப்பிரியா, ஜுஹிஸ்மிதா தாஸ் மற்றும் ர.க.கீர்த்தனா ஆகிய மாணவியர்கள் பங்கேற்றனர். நிகழ்வின் போது மாணவிகள் நெல் நாற்றுகளை சத்திரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சாந்தா என்பவரின் வயலில் நடவு செய்து, நெல் சாகுபடியின் நடைமுறைப் பணிகளைப் பற்றி அறிந்துகொண்டனர். தொடர்ந்து, விவசாயியுடன் கலந்துரையாடி நெல் சாகுபடியின் பல்வேறு நிலைகள், ஒவ்வொரு பருவத்திலும் மேற்கொள்ளப்படும் பணிகள், பயிர் மேலாண்மை முறைகள் மற்றும் அவற்றைப் பின்பற்ற வேண்டிய கால அட்டவணை குறித்துக் கேட்டறிந்தனர்.

மேலும், சாகுபடியின் போது விவசாயிகள் எதிர்கொள்ளும் தொழிலாளர் பற்றாக்குறை, நீர்ப்பாசனச் சிக்கல்கள், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விவசாயியிடம் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி punjab national bank ...the name you can BANK upon!

SASTRA சென்டர் - வட்டார அலுவலகம் திருச்சி, PNB ஹவுஸ், திருச்சி - தஞ்சாவூர் சாலை, கைலாசபுரம், திருச்சி - 620014. தொ. பே.: 0431-2521165, மொபைல் எண்: 9442550086 மின்னஞ்சல் id: cs8327@pnb.co.in

சொத்து மீட்பு மேலாண்மை கிளை (ARMB)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 விதி எண்.8 (6)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின் ஏல அறிவிப்பு

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் மின் ஏல விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப் படுகிறது. சொத்துக்களின் குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கிளையின் பெயர்: மதுரை மெயின் (438300)

கணக்கின் பெயர்: M/s.ஸ்ரீ ராகவேந்த்ரா ப்ளூ மெட்டல் பிரைவேட் லிமிடெட்

கடன்தாரர்/ஜாமீன்தாரர் கணக்கின் பெயர் மற்றும் முகவரி:

1.கடன்தாரர் : M/s.ஸ்ரீ ராகவேந்த்ரா ப்ளூ மெட்டல் பிரைவேட் லிமிடெட், 2/111, பிள்ளையார் நத்தம், பித்தளைப்பட்டி போஸ்ட், திண்டுக்கல் - 624002.
2.கடன்தாரர் : திரு.ச. S. கண்ணன், த/பெ.ஸ்ரீ.ச. சௌந்தர்ராஜன், 2/111, பிள்ளையார் நத்தம், பித்தளைப்பட்டி போஸ்ட், திண்டுக்கல் - 624002.
3.கடன்தாரர் : திரு.S.சரவணன், த/பெ.ஸ்ரீ.S.சௌந்தர்ராஜன், 2/111, பிள்ளையார் நத்தம், பித்தளைப்பட்டி போஸ்ட், திண்டுக்கல் - 624002.
4.பிணையதாரர் : திருமதி.K.மீரா தேவி, க/பெ.திரு.K.M.ராமராஜ், 3/178, கொருட்டியார் குடி தெரு, குமாரவயலூர் போஸ்ட், திருச்சி - 620102.
5.அடமானதாரர் : திருமதி.S. அமுதா, க/பெ.திரு.M. செல்வராஜ், 3/178, கொருட்டியார் குடி தெரு, குமாரவயலூர் போஸ்ட், திருச்சி - 620102.
6.அடமானதாரர் : திரு.S. சக்திவேல், த/பெ.திரு.M. செல்வராஜ், 3/178, கொருட்டியார் குடி தெரு, குமாரவயலூர் போஸ்ட், திருச்சி - 620102.
7.பிணையதாரர் : திருமதி.S. மணிமாலா @ திவ்யா, க/பெ.திரு.G. சரவணன், 1/26 வடக்கு தெரு, சாத்தமங்கலம், லால்குடி - 621703.
8.பிணையதாரர் : திரு.R. ரெங்கசாமி, த/பெ.திரு.ரெங்கபோயன், 1/112, அரண்மனை புதூர், புதுச்சத்திரம் போஸ்ட், திண்டுக்கல் - 624619

அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களின் விவரம் / உரிமையாளர்களின் பெயர் (சொத்துக்களின்) அடமானதாரர் திருமதி.K.மீரா தேவி, திருமதி.S.அமுதா, திரு.S.சக்திவேல், திருமதி.S.மணிமாலா @ திவ்யா ஆகியோர்களுக்கு சொந்தமான அசையா சொத்து

ஐட்டம் 1 : திருச்சி மாவட்டம், திருச்சி பதிவு மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகா, மணிகண்டம் பஞ்சாயத்து யூனியன், குமாரவயலூர் பஞ்சாயத்து, குமாரவயலூர் கிராமம், S. எண்.113/2A, இதற்கு உட்பட்ட 40 செண்ட்ஸ் பரப்பளவு நிலம் மற்றும் இதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும். நான்கு எல்லைகள்: வடக்கில்: திரு.முருகேசன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: ரோடு, தெற்கில்: ராமராஜ் மீரா தேவி நிலம், மேற்கில்: கருப்பண்ணன்-க்கு சொந்தமான நிலம். ஐட்டம் 2: திருச்சி மாவட்டம், திருச்சி பதிவு மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகா, மணிகண்டம் பஞ்சாயத்து யூனியன், குமாரவயலூர் பஞ்சாயத்து, குமாரவயலூர் கிராமம், S.எண்.113/2A, இதற்கு உட்பட்ட 2 ஏக்கர் 47 செண்ட்ஸ் பரப்பளவில் 40 செண்ட்ஸ் பரப்பளவு நிலம் மற்றும் இதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும். நான்கு எல்லைகள்: வடக்கில்: திரு.சக்திவேல் அவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: தென்னடை ரோடு, தெற்கில்: கீழ்மேல் வாய்க்கால், மேற்கில்: கருப்பண்ணன்-க்கு சொந்தமான நிலம். மொத்தம் 80 செண்ட்ஸ் பரப்பளவு நிலம் 1.திருமதி.S.அமுதா 2.திருமதி.S.மணிமாலா @ திவ்யா 3.திரு.S.சக்திவேல் 4.திருமதி.K.மீரா தேவி ஆகியோர்கள் பெயரில் உள்ளது மற்றும் இதனுடன் கட்டப்பட்டுள்ள கல்யாண மண்டபம் "மணிமுத்து செல்வம் திருமண மஹால்" எனும் பெயரில் உள்ளது. முகவரி: 1/248, குமாரவயலூர் மெயின் ரோடு, ஸ்ரீரங்கம் தாலுகா, குமாரவயலூர் போஸ்ட், திருச்சி - 620102.

13 (2) SARFAESI சட்டம் 2002 -ன் படி கோரிக்கை அறிவிப்பு தேதி	29.01.2016
13 (4) SARFAESI சட்டம் 2002 - ன் படி சுவாதீன அறிவிப்பு தேதி	21.04.2016
சுவாதீன நிலை அடையாள / மெய்நிலை / ஆக்கபூர்வ	அடையாள

நிலுவைத் தொகை: 31.10.2026 அன்றுள்ளபடி ரூ.12,63,16,247.76 (ரூபாய் பன்னிரெண்டு கோடி அறுபத்து மூன்று லட்சத்து பதினெட்டாயிரத்து இருநூற்று நாற்பத்து ஏழு மற்றும் எழுபத்து ஆறு பைசா மட்டும்) + 01.11.2026 முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் பிற செலவுகள் உட்பட

குறைந்தபட்ச கேட்பு விலை: ரூ.5,23,00,000/- | முன் வைப்பு தொகை (EMD): ரூ.52,30,000/-

மின் ஏலத் தேதி மற்றும் நேரம்: 03.12.2026 (வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை

முன் வைப்பு தொகை செலுத்த வேண்டிய கடைசி தேதி: மின் ஏலம் தொடங்கும் அல்லது அதற்கு முன்

ஏல உயர்வுத் தொகை: ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஆவணங்கள்:

1. 26.09.2016 தேதியிட்ட ஆவணம் எண் 79/2016-இன் பதிவின்படி 'திருச்சிராப்பள்ளி, இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில், திரு S. துரைராஜ் (வாதி) மற்றும் திரு. SR. சக்திவேல் (பிரதிவாதி) ஆகியோருக்கு இடையிலான வழக்கில் பிறப்பிக்கப்பட்ட சொத்து முடக்க உத்தரவு' 2. 03.03.2022 தேதியிட்ட ஆவணம் எண் 10/2022-இன் படியான பதிவு 'மதுரை தெற்கு சீட்டுப் பதிவாளர் முன்னிலையில் திரு. சக்திவேல் அவர்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட சொத்து முடக்க உத்தரவு' 3. 03.03.2022 தேதியிட்ட ஆவணம் எண் 12/2022-இன் படியான பதிவு 'மதுரை தெற்கு சீட்டுப் பதிவாளர் முன்னிலையில், மார்கதரிசி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் திரு. சக்திவேல் ஆகியோருக்கு இடையே பிறப்பிக்கப்பட்ட சொத்து முடக்க உத்தரவு' 4. நுழைவு விடியோ ஆவணம் எண் 5/2024 தேதி 10.02.2024 M/s மார்கதரிசி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் திரு.சக்திவேல் ஆகியோருக்கு இடையே மதுரை தெற்கு சிட்ஸ் துணைப் பதிவாளர் முன் அனுப்பப்பட்ட இணைப்பு உத்தரவு' 5. 10.02.2024 தேதியிட்ட ஆவணம் எண் 9/2024-இன் படியான பதிவு 'M/s மார்கதரிசி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் திருமதி மீராதேவி ஆகியோருக்கு இடையே, மதுரை தெற்கு சிட் நிதித் துறை துணைப் பதிவாளர் முன்னிலையில் பிறப்பிக்கப்பட்ட சொத்து முடக்க உத்தரவு' 6. 10.02.2024 தேதியிட்ட ஆவணம் எண் 11/2024-இன் படியான பதிவு 'M/s மார்கதரிசி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் திருமதி மீராதேவி ஆகியோருக்கு இடையே, மதுரை தெற்கு சிட் நிதித் துறை துணைப் பதிவாளர் முன்னிலையில் பிறப்பிக்கப்பட்ட சொத்து முடக்க உத்தரவு' 7. நுழைவு விடியோ ஆவணம் எண் - 11/2024 தேதி 13.07.2024 'M/s மார்கதரிசி சிட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கண்ணன், விஜயலட்சுமி, சிந்து, சரவணன், தீபா ஆனந்தி, சக்திவேல் ஆகியோருக்கு இடையே மதுரை தெற்கு சிட்ஸ் துணைப் பதிவாளர் நீதிமன்றத்தில் ஒரு இணைப்பு உத்தரவு வழங்கப்பட்டது'

மின் ஏலத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. 1) மேற்குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எப்படி உள்ளதோ உள்ளவாறு" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். 2.) மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணை சொத்து விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் நன்கு தெரிந்த தகவல்களாக கூறப்பட்டுள்ளன, ஆனால் இந்த பிரகடனத்தில் எந்தவொரு பிழை, தவறான விளக்கம் அல்லது விடுபடுதலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பொறுப்பேற்க மாட்டார். 3.) கீழ்கண்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் https://baanknet.com என்ற இணைய தளத்தில் மின் ஏல விற்பனை 03.12.2026 (வியாழக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும். மின் ஏல விற்பனை மற்றும் நிபந்தனைகளை இணையதளமான https://baanknet.com & www.pnbindia.in பார்க்கவும்.

தேதி: 07.11.2026 இடம்: திருச்சி — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி, (கடன் வழங்கியவர்)

SARFAESI சட்டம், 2002-இன் விதி 8(6)-இன் கீழ் சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

பஞ்சாப் நேஷனல் வங்கி ...the name you can BANK upon!

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014. தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 மற்றும் 9ன் கீழ் அசையாச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8(6) & 9(1)ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு M/s. TSN Ecotech International Pvt Ltd, கணக்கின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 26.11.2026 அன்று மின் ஏல விற்பனை செய்யப்படும். என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

ஜாமீன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : 1) திரு. T. N. சிராஜுதீன், எண். 18/3, சமது பள்ளித் தெரு, காஜா நகர், திருச்சி. 620020. 2) திரு. S. முரளிசுந்தரம், 25/21, முதல் தெரு, இந்தியன் வங்கி காலனி, சிம்கோ மீட்டர் சாலை, திருச்சிராப்பள்ளி - 620021. 3) திரு. A. விக்னேஷ், 35-A, விஷ்வாஸ் நகர், தஞ்சாவூர் பிரதான சாலை, திருச்சி- 620008.

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 31.07.2026 அன்றுள்ளபடி ரூ.31,60,18,412.87 (ரூபாய் முப்பத்து ஒர் கோடியே அறுபது இலட்சத்து பதினெட்டு ஆயிரத்து நானூற்று பன்னிரெண்டு மற்றும் பைசா எண்பத்து ஏழு மட்டும்) மேலும் 01.08.2026 அன்று முதல் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள். 24.09.2018 அன்று கோரிக்கை அறிவிப்பு U/S 13(2) அளிக்கப்பட்டது; 07.01.2019 அன்று சுவாதீன அறிவிப்பு U/S 13(4) அளிக்கப்பட்டது;

வகை- கடன்தாரர் பெயர்: M/s. TSN Ecotech International Pvt Ltd,
ஜாமீன்தாரர்கள்: 1.திரு.T. N. சிராஜுதீன், 2.திரு.S. முரளிசுந்தரம், 3. திரு.A விக்னேஷ்.
சொத்துக்களை அடமானம் வைத்திருப்பவர் பெயர் : திரு. T. N. சிராஜுதீன்,

அடமான சொத்துக்களின் விவரங்கள்: திருச்சிராப்பள்ளி இணை -I & II சார்பதிவு மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டம், K. அபிஷேகபுரம் கிராமம், நகராட்சி பழைய வார்டு எண்.1, பழைய T. சர்வே எண்.47, பழைய T. சர்வே எண்.372/2, துணைப்பிரிவின்படி புதிய சர்வே எண்.372/3, தற்போது மாநகராட்சி பழைய வார்டு K, பிளாக் 20, புதிய வார்டு A மற்றும் B, புதிய பிளாக் 20, புதிய T. சர்வே எண்.130/4D & T. சர்வே எண்.130/4E ஆகியவைகளில் அடங்கிய, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620009, திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், K. அபிஷேகபுரம் கிராமம், கன்டோன்மென்ட், போர்ட்ஸ் சாலை, T. சர்வே எண்.130/4E, பிளாக் 20, வார்டு AB, இல் அமைந்துள்ள பெரிய விஸ்தீரணம் 24838சதுர அடி. அதில் காலி நிலம் 9443சதுர அடி (அதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி 4722சதுர அடி + 4721 சதுர அடி) அதனுடன் அதில் உள்ள தற்காலிக ஷெட். 4722 சதுர அடியின் எல்லைகள்: வடக்கில்: T. சர்வே எண்.130/4D திரு. அசோக்குமார் அவர்களின் சொத்து & T. சர்வே எண்.130/3 பள்ளிவாசல் சொத்து; தெற்கில்: T. சர்வே எண்.130/5A இன் சொத்து; கிழக்கில் : T. சர்வே எண்.130/4E திரு. கிருஷ்ணன் அவர்களின் சொத்து & T. சர்வே எண்.130/4E திரு. பாலாமணி அவர்களின் சொத்து; மேற்கில் : T. சர்வே எண்.132, நடைவழி; 4721 சதுர அடியின் எல்லைகள்: வடக்கில்: T. சர்வே எண்.130/4E, திரு. பாலாமணி அவர்களின் சொத்து; தெற்கில்: T. சர்வே எண்.130/5A சொத்து; கிழக்கில்: T. சர்வே எண்.131, போர்ட்ஸ் சாலை; மேற்கில்: T. சர்வே எண்.130/4E, திரு. சந்திரன் அவர்களின் சொத்து. (Coordinates:10.801202,78.687240); Latitude:10.48'04.3"N; Longitude: 78.41'14.1"E; (BAANKNET Property Id: PUNBRAA25946765)

ரிசர்வ் தொகை: ₹ 5,99,45,000/- | பொலிட் செய்ய வேண்டிய தொகை (EMD): 59,94,500/- | ஏல உயர்வு தொகை: ₹ 2,00,000/-

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: ஏதுமில்லை.

மின் ஏல விற்பனை நடைபெறும் தேதி 26.11.2026, நேரம்: காலை 11 முதல் மாலை 5 மணி வரை

EMD செலுத்த கடைசி தேதி 25.11.2026; நேரம்: மாலை 5.00 மணி வரை | அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல் : 22.11.2026

தொடர்புக்கு: திரு. B. வர பிரசாத், முதன்மை மேலாளர்/அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மொபைல்: 88848 22944; திரு. பிரயாக் ராஜ் சாஹு, சட்ட அதிகாரி, மொபைல்: 74770 57944

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் 26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை https://www.baanknet.com என்ற இணைதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com & www.pnbindia.in ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 09.11.2026 இடம் : சென்னை — முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி